இன்றைய செய்தி நாளைய வரலாறு



# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 18-02-2024

# பண்பாட்டு மொழி, பன்னாட்டு மொழி!

**செயற்கை நுண்ணறிவு யுகத்தில், மொழித் தொழில் நுட்பத்துக்காக இந்தியாவிலேயே முதன் முதலாக மாநாடு நடத்திக்காட்டி இருக்கிறது தமிழ்நாடு அரசு.**

**கல்லில் - பானையில் - காசில் - ஓலையில் இருந்த தமிழ், அச்சில் வந்தது. கணினியில் வந்தது. இன்று செயற்கை நுண்ணறிவுத் தளத்திலும் வந்தாக வேண்டும் என்ற முனைப்பின் வெளிப்பாடே இந்த மாநாடு ஆகும். உலகின் முதல் மொழிக் குடும்பமான நாம், உலகம் முழுமைக்கும் பரவி இருக்கும்மொழிக் குடும்பமாக மாற இம்மாநாடு அடித்தளம் அமைத்துள்ளது.**

'தமிழ் நெட் - 99' என்ற மாநாட்டை 1999 ஆம் ஆண்டு நடத்திக் காட்டினார், அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள். 'கணித்தமிழ் - 24' என்ற மாநாட்டை இன்று நடத்திக்காட்டி இருக்கிறார், இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

"தகவல் புரட்சி காட்டுத் தீயாகப் பரவிக்கொண்டிருக்கிறது. இந்த மின்னல் வேக வளர்ச்சியில் நாம் பின்தங்கி விடக்கூடாது" என்று 'தமிழ்நெட் - 99' மாநாட்டில் உரையாற்றிய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அன்று குறிப்பிட்டார்கள். தமிழ்நாடு மற்ற மாநிலங்களை விட முந்தி நின்றது தகவல் தொழில் நுட்பப் புரட்சியில்.

1997-ஆம் ஆண்டே தகவல் தொழில் நுட்பக் கொள்கையை முதன்முதலில் தமிழ்நாட்டிற்கு வகுத்துக்கொடுத்தார் அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அப்போது சிங்கப்பூரில் ஒரு மாநாடு நடந்தது. அதற்கு அன்றைய அமைச்சர் தமிழ்க்குடிமகனை அனுப்பி வைத்தார் முதலமைச்சர் கலைஞர். தகவல் தொழில்நுட்பத்துக்கு என தனித் துறையையும் 1998-ஆம் ஆண்டிலேயே உருவாக்கி, அதற்கு தனி அமைச்சரையும் நியமித்தார். 1997-ல் தரமணியில் 'டைடல் பார்க்'கை உருவாக்கிட அதற்கென புதுக் கொள்கையினை உருவாக்கி, ஆசியாவிலேயே மிகப்பெரிய தகவல் தொழில்நுட்பக் கட்டடமாக அதனைக் கட்டி, 2000-ஆம் ஆண்டில் அதனைத் திறந்து வைத்தார். இன்று உலகம் முழுவதும் தமிழ்நாட்டு இளைஞர்கள் ஐ.டி.துறையில் கோலோச்ச அடித்தளம் அமைத்தவர் முதல்வர் கலைஞர்.

'தமிழ் நெட் - 99' என்ற மாநாட்டின் மூலமாகத்தான் 'தமிழ் 99 விசைப்பலகை' உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு அரசால் அது அங்கீகரிக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டது. இன்றைக்கு அனைத்து தொழில் நுட்ப வடிவங்களிலும் தமிழைப் பயன்படுத்துகிறோம் என்றால் அதற்கு விதை போட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள். அதன் பின் 5.7.2000 அன்று தமிழ் இணையக் கல்விக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் மூலமாகத்தான் 'கணித்தமிழ்-24' மாநாடும் நடைபெற்றுள்ளது.

**"ஒவ்வொரு நாளும் தொழில் நுட்பம் வளர்ந்து வருகிறது. தொழில் நுட்பத்தில் மொழியின் முக்கியத்துவம் அதிகரித்தும் வருகிறது. எந்த விதமான தொழில் நுட்பம் வந்தாலும் அவை அனைத்திலும் தமிழ் வாழ வேண்டும், ஆள வேண்டும் என்பதுதான் எங்களது நோக்கம் ஆகும்" - என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அத்தகைய நோக்கம் கொண்டதாக இம்மாநாடு நடைபெற்றுள்ளது.**

வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களில் தமிழ் மொழியின் நிலையைக் குறித்து ஆராயவும் விவாதிக்கவும் - புதிய சிந்தனைகளை உருவாக்கிக் கொள்ளவும் இளம் திறமையாளர்களை அடையாளம் காணவும் - 'பன்னாட்டு கணித்தமிழ் - 24' என்கிற மாநாட்டை தமிழ்நாடு அரசின் தமிழ் இணையக் கல்விக் கழகம் கடந்த பிப்ரவரி 8,9,10 ஆகிய நாட்களில் நடத்தி இருந்தது. மொழியை காலத்துக்கு ஏற்ப எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதில் தமிழ்நாடு அரசுக்கு இருக்கும் அக்கறையின் வெளிப்பாடு இது.

**தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், நிதித்துறை அரசு முதன்மைச் செயலாளராகவும், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் தலைவராகவும் இருக்கும் த.உதயச்சந்திரன் ஆகியோரின் முயற்சியால் இம்மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. பத்துக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள் வருகை தந்து சிறப்பித்துள்ளார்கள்.**

ஆங்கிலத் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டு வரும் Natural Language Processing Tools (NLPT), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இயந்திரவழிக் கற்றல் (Machine Learning), Machine Translation (MT), Sentimental Analysis (SA), Large Language Model (LLM), Automatic Speech Recognition (ASR) போன்றவற்றைத் தமிழில் உருவாக்கும் முயற்சியாக இந்த மாநாடு நடைபெற்றுள்ளது.

இணையப் பயன்பாட்டாளர்கள் எண்ணிக்கையில் இந்தியா இரண்டாம் இடத்தில் இருக்கிறது. அதில் மாநிலவாரியாகப் பார்த்தால் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பதாக ஐ.ஏ.எம். ஏ.ஐ. என்ற தொலைத் தொடர்பு ஆய்வகத்தின் அறிக்கை கூறுகிறது. தொழில் நுட்பத்துக்கு ஈடு கொடுத்து தன்னை மாற்றிக் கொள்ளும் மொழியாகத் தமிழ் மொழி உள்ளது. அதனை செயற்கை நுண்ணறிவுக் காலத்திலும் பொருத்திப் பார்க்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். தகவல் தொழில் நுட்பம் எத்தகைய பாய்ச்சலைச் செய்யுமோ, அத்தோடு சேர்ந்து தமிழும் பாய்ச்சலை ஏற்படுத்த வேண்டும். அதற்கு இந்த மாநாடு அடித்தளம் அமைத்துள்ளது.

தொழில் நுட்பத்துக்கு ஈடு கொடுக்கும் மொழிதான் வளரும், வாழும். அத்தகைய தகுதி தமிழுக்கு உண்டு. கணினிக்குள் புகுந்தது. இணையத்துக்குள் இணைந்தது. இன்றைய செயற்கை நுண்ணறிவுக்குள்ளும் செல்ல வேண்டும்.

அறிவியலால் தொழில்நுட்பம் வளர்கிறது. நம் அறிவாலும், ஆர்வத்தாலும் அதற்குள் தமிழும் நுழைந்தாக வேண்டும். செயற்கை நுண்ணறிவுப் பாதையில் தமிழ் மொழியை வெற்றிகரமாகப் பயணிக்க வைக்க வேண்டும். தொழில் நுட்பங்களுக்கு ஏற்ப தமிழ்மொழி, தகவமைக்கப்பட வேண்டும்.

ஓலைச் சுவடிக் காலம் முதல் இன்றைய AI காலம் வரையில் தமிழ், "முன்னைப் பழமைக்கும் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்" விளங்கி வருகிறது.

பண்பாட்டு மொழியான தமிழ், பயன்பாட்டு மொழியாகவும், பன்னாட்டு மொழியாகவும் திகழ வேண்டும். 'உலகின் முதன்மையான செம்மொழி' என்று பாவாணர் சொல்வதை நடைமுறையிலும் காட்டியாக வேண்டும். உலகத் தமிழ் நெடுஞ்சாலையில் தமிழ் பயணிக்கட்டும்.

வாழ்க தமிழ்! பரவுக தமிழ்!




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.2.2024) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் முதல்வரின் முகவரி துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், "மக்களுடன் முதல்வர்" திட்டத்தில் மாநிலம் முழுவதும் நடத்தப்பட்ட 2058 முகாம்களில், 3.50 இலட்சம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு, இத்திட்டத்தின் கீழ், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 60 இலட்சம் ரூபாய்க்கான வங்கி கடனுதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்/கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், முதல்வரின் முகவரி துறை சிறப்பு அலுவலர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பொதுமக்களின் கருத்துகளைக் கேட்டு, ஆய்வு செய்த பின்னரே

# பேரூராட்சிகளுடன் ஊராட்சிகளை இணைப்பது குறித்து முடிவெடுக்கப்படும்!

## சட்டப் பேரவையில் அமைச்சர்கள் கே.என்.நேரு - ஐ.பெரியசாமி அறிவிப்பு!

**சென்னை, பிப். 18- பொதுமக்களின் கருத்துகளை கேட்டு, ஆய்வு செய்த பின்னரே, பேரூராட்சிகளுடன் ஊராட்சிகளை இணைப்பது குறித்து முடிவு எடுக்கப்படும் என்று சட்டப் பேரவையில் அமைச்சர்கள் கே.என்.நேரு, ஐ.பெரியசாமி தெரிவித்தனர்.**

இதுகுறித்து கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ந. தளவாய் சுந்தரம்:** கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஊராட்சிகளின் எண்ணிக்கை 95; பேரூராட்சிகளின் எண்ணிக்கை 53. தற்போது அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருவது என்னவெனில், அங்குள்ள 25 ஊராட்சிகளை பேரூராட்சிகளுடன் இணைப்பதாக அரசிடமிருந்து தகவல் வந்திருக்கிறது. இதுசம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஊராட்சிகளை பேரூராட்சிகளுடன் இணைப்பதை தவிர்க்க வேண்டும் என்று பொதுமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் போராடிக் கொண்டிருக்கிறார்கள்; ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களும், போராட்டங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கு அமைச்சர் அவர்கள் தகுந்த பதிலை அளிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

**அமைச்சர் இ.பெரியசாமி:** பேரூராட்சிகளுடன் ஊராட்சிகளையும், மாநகராட்சியுடன் ஊராட்சிகளையும் இணைப்பதைப் பொறுத்தவரையில், மாநகராட்சிகளாக மாற்றப்படுகின்றபோது எந்தெந்த ஊராட்சிகளை இணைக்கலாம் என்பது குறித்தெல்லாம் கடந்த காலத்தில் தீர்மானங்கள் போடப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அதுசம்பந்தமாக குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இதுகுறித்து குழு நிச்சயமாக விரைவில் முடிவு செய்யும். உறுப்பினர் அவர்கள் அதில் அவருடைய கருத்துகளைத் தெரிவிக்கலாம்.

**அமைச்சர் கே.என்.நேரு:** (குறுக்கீடு) இல்லை, இல்லை சேர்க்காமலெல்லாம் இருக்க முடியாது. அமைச்சர் அவர்கள் தகுந்த பதிலை சொல்லியிருக்கிறார்கள். அதாவது, எந்தெந்த மாநகராட்சி மற்றும் நகராட்சியுடன், அதன் அருகிலிருக்கிற எந்தெந்த ஊராட்சிகளை இணைக்கலாம் என்பது குறித்து தீர்மானம் போடப்பட்டு, சம்பந்தப்பட்ட தலைவர் அவர்களின் ஒப்புதலோடுதான் அவை இணைக்கப்படும். இதற்காக சம்பந்தப்பட்ட துறையினுடைய செயலாளர் அவர்களுடைய தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன்; தூத்துக்குடிக்கு அருகிலிருக்கிற மாப்பிள்ளையூரணி என்ற ஊர் 45,000 மக்கள் தொகை கொண்டுள்ளது. அதை மாநகராட்சியோடு இணைக்கிறபோது, வேறு வழியில்லை; இணைக்க வேண்டும். ஊராட்சியை மாநகராட்சியுடன் இணைத்தால், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ், அங்கு 100 நாட்கள் பணிகள் கிடைக்காது என்ற காரணத்தால், அவற்றை இணைக்க தலைவர்கள் ஒப்புதல் தருவதில்லை.

அதேபோன்று, தாம்பரம் நகராட்சியை எடுத்துக்கொண்டால், அந்நகராட்சியில் அரசாங்கத்தினுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்குக்கூட இடம் இல்லை. ஆனால், மாநகராட்சியின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது; மாநகராட்சி சாலையிருக்கிறது. பக்கத்தில் ஊராட்சி வருகிறபோது, அந்த வசதி வராது என்ற காரணத்தால், சில மக்கள் அதில் இணைக்க வேண்டும் என்று அவர்களாவே விரும்புகிறார்கள். எனவே, இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற தலைவர்களின் பதவிக் காலம் முடிகிற வரை அவை இணைக்கப்படாது; ஆய்வு செய்யப்படும்; பொதுமக்களிடம் கருத்து கேட்கப்படும். பொதுமக்களிடம் கருத்துகள் கேட்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, எவை தேவையோ அவற்றை மட்டும்தான் இணைக்க முடியுமேதவிர, எடுத்தவுடன், இந்த ஊராட்சி, அந்த ஊராட்சி என 25 ஊராட்சிகளையெல்லாம் இணைப்பதற்கு வாய்ப்பு இல்லை.

**ந.தளவாய் சுந்தரம்:** ஊராட்சிகளை பேரூராட்சிகளுடன் இணைப்பது என்பது என்னுடைய கேள்வி. அதற்கு அமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டும்.

**அமைச்சர் கே.என்.நேரு:** ஒரே அமைப்புதான். மாநகராட்சிக்கு அருகில் இருக்கின்ற இடமாக இருந்தாலும், நகராட்சிக்கு அருகில் இருக்கின்ற இடமாக இருந்தாலும், பேரூராட்சிக்கு அருகில் இருக்கின்ற இடமாக இருந்தாலும், மக்கள் தொகைக்கேற்ப, ஊராட்சியில் 5,000க்கும் மேற்பட்ட மக்கள் தொகை இருந்தால், ஊராட்சியைப் பிரிக்க இருக்கிறார்கள். எனவே, அதுபோல் இருக்கின்ற எல்லா இனங்களுக்கும் ஒரே பதில்தான்; அருகில் இருக்கின்ற இடமாக இருந்தால் அதனை இணைக்கலாம். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். சென்னையருகில் இருக்கிற 15,000 குடியிருப்புகள் ஊராட்சிப் பகுதியில் இருக்கின்றன; ரூ.100 கோடிக்கு மேல் வைப்பு நிதி இருக்கிறது. அதனை கையாளக்கூடிய திறமை வாய்ந்த அதிகாரிகள் அல்லது பொறியாளர்கள் அங்கு இல்லை. ஆக, அந்தப் பகுதி மாநகராட்சியுடன் இணைக்கின்றபோதுதான், அந்தத் தொகை ஒழுங்காகக் கையாளப்படும். அதேபோல், அருகில் இருக்கிற மாநகராட்சிகள், நகராட்சிகளில் செயல்படுத்துகின்ற திட்டங்களை எங்களுக்கு ஏன் செய்யவில்லை என்று கேட்கிறார்கள். அதனால்தான் அவை இணைக்கப்பட வேண்டுமேதவிர, வேண்டுமென்றே இணைக்கப்படுவதில்லை.

திண்டுக்கல் மாவட்டத்தில், ஊராட்சியாக இருந்தாலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அங்கே செயல்பட்டு வருகிறது. அங்கே குடி தண்ணீர் 24 மணி நேரமும் தேவைப்படுகிறது. இதையெல்லாம் செய்கிறபோதுதான் அதனை இணைக்கக்கூடிய எண்ணம் வந்திருக்கிறதேயொழிய வேறொன்றுமில்லை.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பதிலளித்தார்.





